

சென்னை, புளியந்தோப்பு, பின்னி மில் மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு தொடக்க விழா பொதுக் கூட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சரும், கழகத் தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் உரைகளின் தொகுப்பான "அப்பா என்று அழைக்கட்டுமா தலைவரே" என்ற நூலினை நீர்வளத் துறை அமைச்சரும், கழக பொதுச் செயலாளருமான துரைமுருகன் வெளியிட, திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் பெற்றுக் கொண்டார். உடன் கழக பொருளாளரும், கழக நாடாளுமன்ற குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு, கழக முதன்மை செயலாளரும், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சருமான கே.என்.நேரு, அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் கே.எஸ். அழகிரி, ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ எம்.பி., இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பாலகிருஷ்ணன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன், கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி பொதுச்செயலாளர் ஈஸ்வரன் எம்.எல்.ஏ., இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சித் தலைவர் பேராசிரியர் கே.எம்.காதர் மொய்தீன், மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ., தமிழக வாழ்வுரிமை கட்சித் தலைவர் தி.வேல்முருகன் எம்.எல்.ஏ., கழக நிர்வாகிகள் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# சென்னை கிழக்கு மாவட்டக் கழக சார்பில் நடைபெற்ற பிரமாண்ட பொதுக் கூட்டத்தில் திரண்ட மக்கள் கடல்!



## தவறாகச் சித்தரிக்கப்பட்ட செய்தி!

# ஆவின் நிறுவனத்தில் குழந்தைத் தொழிலாளர்கள் கிடையாது!

## மேலாண்மை இயக்குநர் திட்டவட்டம்!

சென்னை, ஜுன் 9-

ஆவின் நிறுவனத்தில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. குறிப்பாக, நிர்வாகம் சார்ந்த பணிகளை மேம்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக, ஒப்பந்தப் பணியாளர்கள் சார்ந்த பிரச்சினைகளுக்கு தீர்வு ஏற்படுத்தும் விதமாக ஒப்பந்ததாரர்கள் தொழிலாளர்களை பணியமர்த்தும் போது ஒப்பந்ததாரர்கள் தொழிலாளர்கள் நல சட்ட விதிகளுக்கு உட்பட்டு பணியாளர்களை தேர்வு செய்ய வேண்டும்.

மேலும், அரசு நிர்ணயித்துள்ள ஊதியம், PF மற்றும் ESI ஆகியவற்றை சரிவர வழங்குவதை உறுதிப்படுத்துவதுடன், அவர்களுக்கு வழங்கப்படுகின்ற ஊதியம் அவரவர் வங்கி கணக்குகளில் செலுத்தப்பட வேண்டும் என்பது போன்ற உத்தரவுகளை பிறப்பித்து அதற்கான நடவடிக்கைகளை அலுவலர்கள் தீவிரமாக மேற்கொண்டு வருகின்றனர்.

அம்பத்தூர் ஆவினில் 50க்கும் மேற்பட்ட குழந்தை தொழிலாளர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர் என்ற செய்தி முற்றிலும் உண்மைக்கு புறம்பானதும், வேண்டும் என்றே ஆவின் நிறுவனத்தின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்துவதோடு, நட்டத்தை ஏற்படுத்தும் நோக்கத்தோடு சித்தரிக்கப்பட்ட செய்தியாகும்.

இது குறித்து முறையான விசாரணையினை காவல்துறை மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பால்வளத்துறை அமைச்சர் அவர்களும் செய்தி வெளியிடப்பட்ட உடனேயே அம்பத்தூர் சென்று நேரடி விசாரணை மேற்கொண்டது குறிப்பிடத்தக்கது.

இந்த தவறான செய்தியை சித்தரித்து வழங்கிய ஊடகம் மீது சட்டப்படி நடவடிக்கை மேற்கொள்ள legal notice அனுப்பப்பட்டுள்ளது.

இது போன்று ஆவின் போக்குவரத்து வழித்தட பிரிவுகளில் தவறுகள் நடைபெறுகிறதா என்பதை கண்டுபிடிக்கவும் அவற்றில் தேவையான நடைமுறை மாற்றங்கள் செய்யவும் அறிவுறுத்தப்பட்டு அலுவலர்கள் அப்பணியை மேற்கொண்டு வருகின்றார்கள்.

இவையெல்லாம் நிர்வாகத்தை சீரமைக்க எடுக்கப்படும் நல்ல முன்னெடுப்புகள். ஆனால், இவற்றை தவறாக சித்தரிப்பது மிகுந்த வருத்தத்திற்கு உரிய செயலாகும்.

ஆவின் நிறுவனம் மட்டுமே ஒரே சீரான விலையை அனைத்து காலங்களிலும் பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்குவதோடு ஒரே சீரான குறைந்த விலையில் தரமாக பால் மற்றும் பால் உபபொருட்களை தமிழ்நாடு மக்களுக்கு தந்து வருகிறது. பால் உற்பத்தி மற்றும் பால் கொள்முதலை பெருக்க தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனைகளின் பெயரில் பல்வேறு ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் மிக விரைவாக எடுக்கப்பட்டு வருகிறது.

நிர்வாக ரீதியாக எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளை பொது வெளியில் தவறான கண்ணோட்டத்தில் சித்தரிப்பது தேவையில்லாததும், தவிர்க்கப்பட வேண்டியதாகும்.

எனவே, ஊடகங்கள் மற்றும் அரசியல் கட்சிகள் இவற்றின் உண்மை தன்மையினை அறிந்து தங்கள் கருத்துக்களை வெளியிட கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு ஆவின் நிறுவன மேலாண்மை இயக்குநர் தெரிவித்துள்ளார்.




கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளரும் – அமைச்சருமான பி.கே.சேகர்பாபு வெள்ளிச் செங்கோல் நினைவுப் பரிசு வழங்கிய காட்சி.